வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 206 / 2022**

வழக்கு சாட்சி **PW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹேமலதா | தொழில் | : பி.எட் படித்து வருகிறேன். |
| தந்தை பெயர் | : பொன்ராஜ் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பழைய ஆயக்குடி | வயது | : சுமார் 22 |
| தாலுக்கா | : பழனி | நாள் | : 08.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1-ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

எனது சார்பாகவும், எனது சகோதரி சார்பாகவும் எனது தாயார் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து மனுக்களின் விபரமும் எனக்கு தெரியும் என்றால் ? ஆமாம். எனது சகோதரி கிருஷ்ணபிரியா என்பவரால் எனக்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ள மனுக்களின் விபரமும் எனக்கு நன்கு தெரியும் என்றால் ? சரிதான். இந்நீதிமன்றத்தில் 2-ம் வாதியான எனது சகோதரி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.732/2024 என்ற எண்ணில் உரிமையியில் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 32 விதி 12-ன் கீழாக தாக்கல் செய்த மனுவில் 2-ம் வாதி இளவராக இருந்த போது தந்தையை பாதுகாவலராக காட்டி 2, 3 வாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரிதான்.

எனக்கும் எனது சகோதரிக்கும் எனது தகப்பனார் பாதுகாவலராக இருந்து வழக்கினை நடத்தி வந்துள்ளதாக பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில் எனது தாயார் தான் எங்களுக்கு பாதுகாவலராக இருந்து வந்தார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் ? ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை மற்றும் அசல் வழக்கிலும் கடந்த 24.09.2005ம் தேதிய பாகபாத்திய விடுதலை பத்திரத்தை தான் ஆவணமாக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். 24.09.2005-ம் தேதிய ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்திருந்தால் அந்த ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்றால் ? சரியல்ல. 24.09.2008ம் தேதியில் ஒரு பத்திரம் பதிவு ஏற்பட்டுள்ளது.

நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குகளில் 24.09.2008-ம் தேதியிட்ட ஒரு ஆவணம் இருப்பதாக வழக்கில் யாதொரு இடத்திலும் சொல்லவில்லை என்றால் ? 24.09.2005 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 24.09.2008 தான் சரியான தேதி ஆகும்.

கடந்த 10.09.2008ம் தேதியன்று எனது தகப்பனாரின் தகப்பனார் அதாவது தகப்பன் வழி பாட்டனார் அவரது சகோதரர் முருகேசன் என்பவரரிடம் இருந்து ரூ.1,23,350க்கு கிரையம் செய்ததாக ஆவணம் உள்ளது என்றால் ? சரிதான். அதன்பின்னிட்டு எனது தகப்பனார் அவரது தகப்பனாரிடமிருந்தும் அவரது சகோதரியிடமிருந்தும் ரூ.1,64,468க்கு கிரையம் பெற்றதாக தான் ஆவணம் உள்ளது என்றால் ? சரிதான். ஆக இந்த வழக்கில் 2/3 பாக சொத்துக்களை எனது தகப்பனார் பணம் கொடுத்து தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? சரிதான்.

எனது தகப்பனார் 2/3 பங்கு சொத்துக்களை கிரையம் கொடுத்து வாங்கியுள்ள நிலையில் நானும் எனது சகோதரியும் 2/3 பங்கினை பாகப்பிரிவினை பரிகாரம் கோருவது ஏற்புடையது அல்ல என்றால் ? சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில், எனது தாயாரின் நகைகளை விற்பனை செய்து சொத்துக்களை எனது தகப்பனார் வாங்கினார் என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். எனது தாயாரின் நகைகளை விற்பனை செய்து சொத்துக்கள் வாங்கியிருந்தால் எனது தாயார் பெயரில் தான் கிரையம் செய்திருப்பார் என்றாலும், அவ்வாறு நகைகளை விற்பனை செய்யாமல் எனது தகப்பனார் சொத்தினை கிரையம் பெற்றதால் தான் அவரது பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் ? சரியல்ல. மொத்தமாக சொத்துக்கள் தகப்பனார் பெயரில் வேண்டும் என்றதால் எனது தகப்பனார் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது.

எனது தகப்பனார் தாவா சொத்துக்களை பொறுத்து சுயசம்பாத்தியத்தில் கிரையம் பெற்றதால் தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் வாதிகளாகிய எங்களுக்கு எந்தவொரு பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். இவ்வழக்கில் 3-ம் பிரதிவாதியாக மாவட்ட ஆட்சியராக சேர்த்துள்ள நிலையில் அவருக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் ? சரியல்ல. சொத்தினை விற்பனை செய்யக்கூடாது என்பதற்காக மாவட்ட ஆட்சியர் மற்றும் சார்பதிவாளரை தரப்பினராக சேர்த்துள்ளோம். தாவாசொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் அல்ல என்பதால் நாங்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் மீது எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் ? சரிதான். சொத்துக்களை விற்பனை செய்யக்கூடாது என்பதற்காக 2, 3 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள். சொத்துக்களை விற்பனை செய்யக் கூடாது என்று இவ்வழக்கில் இடைமனுக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ?

எனக்கு அது பற்றி தெரியவில்லை. நான் அரசு அதிகாரிகள் மீது எவ்வித பரிகாரமும் கோராத நிலையில் நான் 2, 3 பிரதிவாதிகளை இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் ? சரியல்ல. அவசியமற்ற தரப்பினராக வழக்கில் சேர்த்துள்ள போதும் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவை 2, 3 பிரதிவாதிகள் நிறைவேற்ற தயாராக உள்ளார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது.

C
JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.08 19:08:41 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்